


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஜூலை 21, 2022 | புரட்சி 21 | முழக்கம் 27 | விலை: ரூ.3.00

# காமராசர் திராவிட மாடலின் முன்னோடி

காமராசரின் 120 ஆவது பிறந்தநாளை ஒட்டி தமிழ்நாடு அரசு அவரது பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாக அனைத்து பள்ளிகளிலும் கொண்டாட உத்தரவிட்டுள்ளது. கல்விக் கண் திறந்த கல்வி வள்ளல் காமராசர். கடவுள் வாழ்த்துகளை கைவிட்டுவிட்டு, 'காமராசர் வாழ்த்துப் பாடலை பாட வேண்டும்' என்று சொன்னத் தலைவர் பெரியார். அவருக்கு மிகப் பொருத்தமாக இந்த நாளில் தமிழ்நாடு அரசு ஒரு திட்டத்தை துவக்கியிருக்கிறது. முதற்கட்டமாக 15 மாவட்டங்களில் 292 கிராமப்புற வளர்ச்சி பள்ளிகளில் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு துவக்கி இருக்கிறது.

- இந்தியை எதிர்த்தார் காமராசர். மத்திய அரசு, மாநில அரசு வேலைத் தேர்வுகளில் இந்தி கட்டாயமான ஒரு பாடமாக இருக்கக் கூடாது என்று 1955இல் நேருவை சந்தித்து ஆலோசித்து விட்டு அவர் அறிவித்தார். அதற்கு காரணம், பெரியார் இந்தியை எதிர்த்து தேசியக் கொடி எரிப்புப் போராட்டத்தை அறிவித்தது தான்.
- 1966இல் மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சி 10 நாள் பயிற்சி முகாமை நடத்தியபோது இந்திரா காந்தி அம்மையார் ஆங்கிலத்திலே பேசினார். வடநாட்டு இந்திக் காரர்கள் இந்தியிலே பேச வேண்டும் என்று இந்திரா காந்தியைப் பார்த்து கூச்சலிட்டார்கள். அப்போது தமிழ்நாட்டைச் சேர்ந்த குமரி ஆனந்தன் தமிழில் பேச, கேரளாவைச் சேர்ந்த ஏ.கே.அந்தோணி மலையாளத்தில் பேச, கன்னடத்தைச் சேர்ந்த குண்டுராவ் கன்னடத்தில் பேச, இந்தி வெறியர்களுக்கு சரியான பதிலடி கொடுத்தனர். இந்த செய்தியை அறிந்த காமராசர் தங்களுடைய தாய் மொழியில் பேசிய தலைவர்களை அழைத்து 'நீங்கள் செய்தது தான் சரியான பாடம்' என்று அவர்களை பாராட்டினார்.
- 1953 ஆம் ஆண்டு மறைந்த திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளராக இருந்த குத்தூசி குருசாமி அவர்கள் திராவிடர் கழகத்தின் சார்பில் ஜாதி ஒழிப்பு மாநாடு ஒன்றை நடத்தினார். அந்த மாநாடு, காந்தியின் மகனுக்கும், இராஜாஜியின் மகளுக்கும் நடைபெற்ற திருமணத்தை பாராட்டுவதாகவும் ஜாதி ஒழிப்பிற்காகவும் நடத்தப்பட்ட மாநாடு அது. அந்த மாநாட்டிற்கு குத்தூசி குருசாமி இராஜாஜியை அழைத்தார். இராஜாஜி வருவதற்கு மறுத்துவிட்டார். அதன்பிறகு, மாநாடு நடப்பதற்கு நான்கு நாட்களுக்குப் முன்பு காமராசரை மாநாட்டில் பங்கேற்க வேண்டும் என்று அழைத்தபோது ஆர்வத்துடன் அவர் அந்த மாநாட்டில் பங்கேற்று ஜாதி ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை உறுதியுடன் அங்கே பதிவு செய்தார்.
- மாநிலங்களின் உரிமையில் அவருக்கு எவ்வளவு அக்கறை இருந்தது என்பதை முன்னாள் திட்டக்குழு துணைத் தலைவர் நாகநாதன் 'இந்திய கூட்டாட்சியியல்' என்ற புத்தகத்தில் அவர் பதிவு செய்திருக்கிறார். 1975 இல் அவர் காமராசரை சந்தித்த போது, 'தென் மாநிலங்கள் தங்களுக்குள் ஒரு ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொண்டு நிதி, மின்சாரம் போன்றவற்றை பங்கிடுவதில் தங்களுக்குள் ஒரு புரிதலை உருவாக்கிக் கொள்ள வேண்டும். மாநிலங்களுக்கான உரிமைகளை விட்டுக் கொடுக்கக் கூடாது' என்று உறுதியாக தெரிவித்ததை அந்த நூலில் பதிவு செய்திருக்கிறார்.
- இந்தி எதிர்ப்பு, மாநில உரிமை, ஜாதி எதிர்ப்பு, கல்வி வளர்ச்சி என்று திராவிடர் இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாட்டில் உறுதியாக நின்ற காமராசர் திராவிட மாடலின் முன்னோடியாக திகழ்ந்திருக்கிறார். சொல்லப் போனால் 'திராவிடர் இயக்கத்தின் செல்லப்பிள்ளை காமராசர்'.

காமராசர் வாழ்க!

– புரட்சிப் பெரியார் முழக்கம் 21.07.2022

# 'கருவறைத் தீட்டை' நியாயப்படுத்தும் ஆகம விதிகளுக்குத் தடை போட வேண்டும்

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தவுடன், அனைத்து ஜாதி இந்துக்களும் அர்ச்சகராகும் பிரச்சனையை கையில் எடுத்து உரிய முறைப்படி அவர்களுக்கு அர்ச்சனை செய்யும் நியமனங்களை வழங்கியிருக்கிறது. தமிழ்நாட்டில் பார்ப்பனர்கள் இதை வெளிப்படையாக எதிர்க்க முடியாத நிலையில், இப்போது வெளி மாநிலத்தி லிருந்து ஆட்களைப் பிடித்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றை தொடர்ந்திருக்கின்றனர்.

மத்திய பிரதேசத்தை சேர்ந்த ஜெகத்குரு இராமநாத ஆச்சாரியார் சுவாமி என்பவரும் டெல்லி, உத்திர பிரதேசம், பெங்களூர் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த 8 பேரும் தமிழ்நாட்டைச் சாராதவர்கள் இந்த வழக்கை தொடர்ந்திருக்கிறார்கள். தமிழ்நாடு அரசின் வழக்கறிஞர் தமிழ்நாடு அரசு நியமித்த ஒரு உத்தரவுக்கு எதிராக வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழக்குத் தொடர உரிமையில்லை, எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறியதை, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு ஏற்க தயாராக இல்லை.

ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரை நியமிக்க வேண்டும். அந்த நீதிபதி ஆகம விதிகளை தெரிந்தவராக இருக்க வேண்டும். ஆகம விதிப்படி தமிழ்நாட்டில் எந்தெந்த கோவில்கள் செயல்படு கின்றன என்பதை கண்டறிய வேண்டும், சடங்குகள், பூசைகள், கோவில் நடைமுறைகள் பற்றி தெரிந்தவர்கள் அந்தக் குழுவில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். உச்சநீதிமன்றம் கூறியிருப்பதைப் போல ஆகம விதிகளை மீறுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு அறிவுறுத்தியிருக் கிறது. பிரச்சனை பழைய நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறது. நீதிமன்றத் தின் தீர்ப்பு எப்படி இருந்த போதிலும் கூட, கோவிலுக்குள், கர்ப்ப கிரகத்தினுள் சென்று வழிபடக்கூடிய உரிமை இந்துக்களிலேயே ஆகம விதிப்படி பிராமண சமூகத்தைச் சேர்ந்தவர் களுக்கு மட்டும் தான் உண்டு. மற்றவர்களுக்கு இல்லை என்று கூறுகிற நிலையில் தான் இன்றைக்கும் சனாதன தர்மம், இந்து தர்மம் என்பது இருந்து கொண்டு இருக்கிறது. அதனால் தான் நாம் வெகு மக்களை எச்சரித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்து ஒற்றுமை என்று இவர்கள் பேசுவ தெல்லாம் போலிக் கூப்பாடு. பார்ப்பன சாம்ராஜ்ஜியத்தின் கீழ் அடக்கி ஒடுக்குவதற்கான ஓர் சூழ்ச்சி. எனவே அவர்கள் கூறுகிற இந்து வாதத்தில், இந்து சூழ்ச்சி வலையில் சிக்கி விடாதீர்கள் என்று நாம் கூறி வருகிறோம். நாம் கூறுவது எவ்வளவு உண்மை என்பதை இந்த வழக்கு நிரூபித்து இருக்கிறது. இந்துக்களே ஒன்றுபடுங்கள், இந்துக்களாக ஒன்றுபடுங்கள் என்று முழங்கு கிறவர்கள், இந்துக்களே நாம் சமமாக இருப்போம், இந்துக்களே நமக்குள் வேற்றுமை இல்லை, எந்த ஜாதியாக இருந்தாலும், இந்துக்களாகிய நாம் ஆண்டவனுக்கு அருகில் சென்று, மணி அடித்து பூசை செய்கின்ற உரிமை நமக்கு உண்டு என்று கூறுவதற்கு யாரும் தயாராக இல்லை.

வடநாட்டில் பல கோவில்களில் ஆகம விதி என்ற ஒன்றை பின்பற்றுவதே கிடையாது. வட நாட்டுக் கோவிலுக்குள் கோவில் கருவறைக்குள் நேரடியாக பக்தர்கள் சென்று வழிபடக்கூடிய உரிமை பல கோவில்களில் இருக்கிறது. ஆனால் இங்கே தான், ஆகம விதியைப் பிடித்துக் கொண்டு, தீண்டாமையை யும் வேறு வகையில் இங்கே அமுல்படுத்திக் கொண் டிருக்கிறார்கள்.

எனவே தீண்டாமை, ஆகம விதிகளும் ஒன்றுபோல் ஆகிவிட்ட நிலையில் தீண்டாமை ஒழிப்புக்கு எப்படி ஒரு சட்டம் வந்ததோ அதே போல ஆகம விதி களையும் ஒழிக்க ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும் என்ற இயக்கத்தை நடத்துகிற ஒரு காலம் உருவாகி வருகிறது என்றே நாம் கருதுகிறோம்.

# 'தமிழ்நாடு' பெயர் மாற்றத்தின் வரலாறு

தமிழ்நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்று முதலமைச்சர் அண்ணா பெயர் சூட்டிய நாள் 18.07.1967. அன்று சட்டமன்றத்தில் அண்ணா, தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதை தமிழ்நாடு நாள் என்று தமிழ்நாடு அரசு கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்த தீர்மானத்தை சட்டமன்றத்தில் ஒருமனதுடன் நிறைவேற்ற வேண்டும் என்று அண்ணா மிகுந்த கவலையுடன் செயல்பட்டார். இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்பு, தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்திற்குப் பிறகு, அரசியல் சட்டத்திலே மாற்றங்களை செய்ய முடியுமா என்பது குறித்து, இந்திய அரசியல் உயர் மட்டத் தலைவர்களிடம் அவர் கலந்து ஆலோசித்தார். அதில் எந்த தடையும் இருக்காது என்று உறுதியைப் பெற்று அவர் இந்த தீர்மானத்தை முன்மொழிந்தார்.

குறிப்பாக அவர் ஒரு நிகழ்வையும் சுட்டிக்காட்டினார். "பத்து நாட்களுக்கு முன்பு நாடாளுமன்றத்தில் இந்த மாநிலத்தைப் பற்றி பேச வேண்டிய வாய்ப்பு கிடைத்த நேரத்தில், அங்குள்ள உள்த்துறை அமைச்சர் சவான் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று கூறியே பழக்கப்பட்டவர், பத்து நாட்களுக்கு முன்பு மிகுந்த அக்கறையோடு 'தமிழ்நாடு' என்று குறிப்பிட்டார் என்பதை அண்ணா தன்னுடைய உரையிலே எடுத்துக் காட்டுகிறார். எதிர்க்கட்சித் தலைவராக காங்கிரஸ் கட்சியைச் நேர்ந்த கருத்திருமன் இருந்தார். அவர் இதில் சில திருத்தங்களை நான் கொண்டு வந்திருக்கிறேன் என்று அவர் கூறினார். அவர் கூறியது சில திருத்தங்கள் தானே தவிர தீர்மானத்தை அவர் எதிர்க்கவில்லை இதற்கு நிச்சயமாக ஒத்துழைப்பார்" என்று கூறியதோடு கருத்திருமன் அவர்களிடம் ஒரு கருத்தையும் முன்வைத்தார்.

"என்னுடைய பாட்டனார் காலத்தில் தான் நம்முடைய நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்று பெயரிடப்பட்டது. எதிர்க்கட்சியில் உட்காந்திருந்த என்னுடைய பாட்டனார் கருத்திருமான் இதை ஆதரித்தார் என்று கருத்திருமன் பேரப்பிள்ளைகளுக்கும், எங்களுடைய பேரப் பிள்ளைகளுக்கும் எதிர்காலத்திலே பேசக்கூடிய நல்ல நிலைமைகளையெல்லாம் இந்தத் தலைவர்களெல்லாம் எண்ணிப் பார்ப்பார்களேயானால், நிச்சயமாக அவர்கள் கூறுகிற சிறு சிறு ஆலோசனைகளை கூட திரும்பப் பெற்றுக் கொண்டு இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பார்கள்; ஆதரிக்க வேண்டும்" என்று ஒரு உணர்வுப்பூர்வமான ஒரு வேண்டுகோளை வைத்தார். அந்த உணர்வை அன்று அத்தனைத் தலைவர்களும் ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனால், முன்னாள் தொழில்துறை அமைச்சராக இருந்த ஆர். வெங்கட்ராமன் சட்டமன்றத்தில், இப்படி 'தமிழ்நாடு' பெயர் மாற்றத்தை சட்டமன்றத்தில் கொண்டு வந்தால் அதில் சிக்கல்கள் வரும், வெளிநாட்டு ஒப்பந்தங்களை திருத்தி எழுத வேண்டி வரும் , என்றெல்லாம் பேசிய போது அண்ணா அதற்கு அழகான பதிலைச் சொன்னார். "வெங்கட்ராமன் அவர்கள் பல வெளிநாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார் என்பதைத்தான் அவரது பேச்சு வெளிப்படுத்துகிறதே தவிர, இதில் சிக்கல்கள் எழ வாய்ப்புகள் இல்லை" என்று மிக சாதுர்யமாக அதற்கு பதிலளித்தார். இறுதியில் அவைத் (சி.பி. ஆதித்தனார்) தலைவரிடம் ஒரு வேண்டுகோளை அண்ணா முன் வைத்தார். "நான் தமிழ்நாடு என்று சொல்வேன் உறுப்பினர்கள் வாழ்க என்று சொல்ல வேண்டும். அதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அவரின் அனுமதியோடு முதலமைச்சர் அண்ணா 'தமிழ்நாடு' என்று கூற, உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து 'வாழ்க' என்று மூன்று முறை முழக்கமிட வரலாற்று சிறப்பு மிக்க அந்தத் தீர்மானம் நிறைவேறியது.

தலையங்கம்

## பாராட்டுகிறோம், தர்மபுரி 'எம்.பி.'யை!

அரசு கட்டிடம் கட்டும் நிகழ்வைத் தொடங்க முஸ்லீம் மத சடங்குகளை மட்டுமோ அல்லது கிறிஸ்துவ மத சடங்குகளை மட்டுமோ செய்திருந்தால் அதை ஏற்பார்களா? கலவரம் நடத்தி சூறையாடப்பட்ட 'சக்தி' இன்டர்நேஷனல் பள்ளி, 'செயின்ட் ஜான்' பள்ளியாக இருந்திருந்தால், ஒன்றிய அரசின் மகளிர் ஆணையம் அடுத்த சில மணி நேரத்திலே விசாரணைக்கு வந்திருக்கும்! பா.ஜ.க.வும் இந்து முன்னணியும் இப்போது மவுனம் காப்பதுபோல இருந்திருப்பார்களா? ஆனால், அரசு நிகழ்ச்சிகளில் புரோகிதர்களை மட்டும் வைத்து சடங்கு செய்தால் அது இயல்பானதாக கடந்து போய் விடுகிறார்கள். பொதுப் புத்தி அவ்வாறு வடிவமைக்கப் பட்டுள்ளது.

அரசும் – மதமும் விலக்கி வைக்கப்பட வேண்டும். அதுவே மதச் சார்பின்மை என்று சொன்னால் மதத்தை விலக்குவது கூடாது; அனைத்து மதங்களையும் சமமாகக் கருத வேண்டும் என்று பதில் கூறுகிறார்கள். அப்படித்தான் நடக்கிறதா?

1968இல் அண்ணா முதலமைச்சராக வந்தவுடன் தலைமைச் செயலாளராக இருந்த சி.ஏ. இராமகிருட்டிணன், அரசு அலுவலகங்களில் படிப்படியாகக் கடவுள் படங்களை அகற்றிட வேண்டும் என்று துறைத் தலைவர்களுக்கு அரசாணை பிறப்பித்தார். 1993 டிசம்பர் 13ஆம் தேதி நிர்வாக சீர்திருத்தத் துறை (Personnale and Administrative Reforms Department) – அரசு நிகழ்ச்சிகளில் மதச் சடங்குகளை நடத்தக் கூடாது. அரசு வளாகங்களில் வழிபாட்டுத் தலங்களைக் கட்டக் கூடாது என்று உத்தரவிட்டது. இந்த உத்தரவைக் கட்டாயம் அமுல்படுத்த வேண்டும் என்று 2010இல் சென்னை உயர்நீதிமன்ற அமர்வு மாநில அரசுக்கு உத்தரவிட்டது. அதைத் தொடர்ந்து அப்போது நடந்த ஜெயலலிதாவின் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி நீதிமன்றத் தீர்ப்பையேற்று 1993ஆம் ஆண்டு உத்தரவைப் பின்பற்ற வேண்டும் என்று அரசுத் துறைகளுக்கு உத்தரவிட்டது. உத்தரவுகள் காகிதத்தில் மட்டுமே இருநதன. நடைமுறையோ நேர் எதிராகவே இருந்தது. அரசு அலுவலகங்கள், காவல்நிலையங்கள், போக்குவரத்துக் கழகங்கள், இந்துப் பண்டிகைகளை விழாக்களாகவே கொண்டாடின. தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகும் இதுதான் நிலை. பல அமைச்சர்கள் அரசு நிகழ்வுகளில் நடக்கும் சடங்குகளில் பங்கேற்கின்றனர்.

அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, அரசுத் துறையில் எல்லைகளைக் கடந்து அனைத்து மதச் சடங்குகளிலும் பங்கேற்கிறார். சொல்லப் போனால் அறநிலையத் துறை இந்து மத சடங்குகளை எப்படிக் கொண்டாட வேண்டும் என்று விளம்பரமே செய்கிறது.

காவிரி நீர் வரும் காலத்தில் ஆடிப் பெருக்கு விழாவை எப்படிக் கொண் டாட வேண்டும் என்று அறநிலையத்துறை சார்பில், அரசு முத்திரையோடு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கலைஞர் படத்தோடு தன்னுடைய படத்தையும் போட்டு இந்து தேவியின் படம் ஒன்று போட்டு ஒரு விளம்பரம் வெளியிடப்பட்டு இருக்கிறது. அதில் ஒரு நீண்ட கதை அடங்கியிருக்கிறது.

குடும்ப உறவுகள் மிக நன்றாக இருக்க வேண்டும் என்று சொன்னால், மேட்டூர் அணை திறந்ததற்குப் பிறகு, காவிரி தண்ணீர் வந்ததற்குப் பிறகு அந்தக் காவிரியில் சுமங்கலிகள் பூஜை செய்து முழுக்குப் போட வேண்டும் என்று அந்தப் புராணக் கதை கூறுகிறது. செல்வத்திற்கு அதிபரான குபேரனின் மகள் தான் காவிரி. காவிரியின் ஆணவத்தை அடக்க அகத்தியர் காவிரியை தனது கமண்டலத்தில் பிடித்துக் கொண்டார். அதைக் காக்கை உருவில் வந்த விநாயகன், கமண்டலத்தைப் பிடுங்கி உருட்டிவிட்டார். தண்ணீர் எல்லா இடங்களிலும் பரவியது. அப்போது தண்ணீர் வருகிற இடத்தில் காவிரித் தாயை கர்ப்பமாகக் கருதி, கர்ப்பிணிகளுக்குப் பிடித்த உணவுகளான சாம்பார் சாதம், புளியோதரை, கற்கண்டு சாதம், தேங்காய் சாதம், எலுமிச்சை சாதம், தயிர் சாதம் போன்ற சைவ உணவுகளை மட்டும் சுமங்கலிகள் அதாவது கணவனோடு வாழ்ந்து கொண்டிருக்கிற தாலியோடு இருக்கிற சுமங்கலிகள் கொண்டு வந்து காவிரியில் வைத்து குளிக்க வேண்டும். குளித்தப் பிறகு மஞ்சளில் பிள்ளையாரைப் பிடித்து வைத்து, பிள்ளையாருக்கு சந்தனம், மஞ்சள், குங்குமம் வைத்து பூக்களால் அலங்கரித்து பிறகு சாப்பாடு, காதோலை, கடுகமணி மாலை, பூ பொட்டு, தாலிக் கயிறு, வாழைப்பழம் வைத்து பூசை செய்து தோத்திரம் பாடி, தூபதீபம் ஏற்றி பூசையை முடிக்க வேண்டும்.

இப்படி செய்தால் ஒவ்வொரு குடும்பத்தின் உறவுகளும் செழிப்பாக செழித்து வளரும் என்று இந்து அறநிலையத் துறை அரசு சார்பில் விளம்பரம் செய்து மக்களிடையே பரப்பிக் கொண்டிருக்கிறது.

கோவிலையும், அதன் உடைமைகளையும் காப்பாற்ற வேண்டியதும், சடங்குகளை முறைப்படி நடத்த வேண்டியதும் அறநிலையத் துறை கடமை. அதை நாம் மறுக்கவில்லை. ஆனால் எல்லைகளைத் தாண்டி இத்தகைய பிரச்சாரங்களை செய்வது அறநிலையத் துறையின் வேலையா? அதிலும் அரசு சார்பில் இவைகள் நிகழ்த்தப்பட வேண்டுமா?

இந்த நிலையில் தர்மபுரியில் திமுக எம்.பி. செந்தில் குமார் பாராட்டத்தக்க ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார். அங்கே அரசு விழா ஒன்றிற்காக இந்து மத சடங்கு படி பூமி பூஜை போட்ட போது அதை அவர் தட்டிக் கேட்டிருக்கிறார். ஏன் இந்து மதப்படி மட்டும் பூஜை செய்கிறீர்கள்? பிற மதத்தவர்களை, பகுத்தறிவாளர்களை ஏன் அழைக்க வில்லை? இங்கே நடப்பது இந்து மத ஆட்சி அல்ல. திராவிட மாடல் ஆட்சி! என்று அவர் சுட்டிக்காட்டி எதிர்ப்பைத் தெரிவித்தது உண்மையிலேயே நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

கொள்கை உணர்வாளர்கள் இன்னும் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள். தட்டிக் கேட்பார்கள் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது.

## திருப்பூர் கழகம் பதிலடி

# மலிவான அரசியல் செய்யும் பா.ஜ.க.வினர்!

திருப்பூரில் பா.ஜ.க.வினர் அரசு கல்லூரிகளின் பெயர்களை முறைகேடாக பயன்படுத்தி துண்டறிக்கைகளை அச்சிட்டு "செல்பி வித் அண்ணாமலை" என்று விளம்பரப்படுத்தி கல்லூரி களுக்குள் அத்து மீறி நுழைய திட்டமிட்டு இருந்தார்கள்.

அண்ணாமலையைக் கூட்டி வந்து சாலைகளில் கூட்டமாக கூட காவல்துறையிடம் எந்தத் தகவலும் தெரிவிக்காமலும், அனுமதியும் பெறாமலும் சட்டம் ஒழுங்கை மதிக்காமல் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

பா.ஜ.க.வினர் பேசினால் பரப்புரையில் ஈடுபட்டால் என்ன பேசுவார்கள் என்பதை பொதுமக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

குறிப்பிட்ட மதத்திற்கு எதிராக மத வெறுப்பு பிரச்சாரத்தில் ஈடுபட்டு, வன்முறையை தூண்டும் விதத்தில் பேசுவது, கலவரங்களை உருவாக்கி அதன் மூலம் குளிர் காய்வது போன்ற பொது அமைதியை குலைக்கும் வகையில் தான் இவர்களின் பேச்சுக்கள் இருக்கும்.

இச்செய்தி பரவிய உடன் திராவிடர் விடுதலை கழகத்தின் திருப்பூர் மாவட்ட தலைவர் முகில் ராசு, திருப்பூர் மாவட்ட காவல்துறை ஆணையர் அலுவலகத்தை உடனடியாக தொடர்பு கொண்டு இந் நிகழ்விற்கு கழகத்தின் கடும் கண்டனத்தை பதிவு செய்ததோடு, இந்நிகழ்ச்சியை நடத்த அனுமதித்தால் இது போலவே நாங்களும் நிகழ்ச்சி நடத்த வேண்டி வரும் என்று எச்சரிக்கையும் விடுத்தார்.

காவல்துறை அலுவலகத்தில் இப்படியான நிகழ்ச்சி எதற்கும் அனுமதி பெறப்படவில்லை, அப்படி எந்த நிகழ்ச்சியில் நடைபெறாது என்று உறுதியளித்தனர்.

மேலும் பெரியாரிய இயக்கங்கள், ஆதித்தமிழர் பேரவை, தீண்டாமை ஒழிப்பு முன்னணி, மக்கள் அதிகாரம் ஆகிய அமைப்புகள் தங்கள் கடும் கண்டனத்தை தெரிவித்து போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தன. உடனே காவல்துறை கல்லூரிகளின் வாயிலில் குவிக்கப்பட்டன.

பல்லடம் எல்.ஆர்.ஜி மகளிர் கல்லூரி முடிந்தவுடன் வெளியே வந்த மாணவிகள் அவர்களாகவே பாஜகவினரிடம் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

"கல்லூரி தேர்வுகள் நடைபெறும் இச்சூழலில் எங்களின் கல்விக்கு பெரிய இடையூறு செய்கிறீர்கள்" என்றும் "கல்லூரியிலிருந்து வெளி வருவதற்கே எங்களுக்கு சிரமங்களை ஏற்படுத்துகிறீர்கள்" என்றும் மாணவிகள் பாஜகவினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

மாணவிகளின் கல்வி குறித்த கவலையை துளியும் கருத்தில் கொள்ளாமல் மீண்டும் அதே இடத்தில் நின்று கொண்டு பாஜகவினர் மாணவிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

காவல்துறை உடனடியாக தலையிட்டு முறையாக அனுமதி பெறப்படாமல் நடத்தும் இந்த நிகழ்ச்சியை நிறுத்தி கலைந்து செல்லும்படி பாஜகவினரை காவல் துறை எச்சரித்தது. அதன் பிறகே பாஜகவினர் கலைந்து சென்றனர்.

திருப்பூரில் பாஜகவினரின் இந்த கீழ்த்தரமான பிரச்சாரத் தினால் மக்கள் மத்தியில் பாஜகவின் மீது கடும் அதிருப்தி உருவாகி உள்ளது.

- பரிமளராசன்

### அகில இந்திய சாதி ஒழிப்பும் நாமும்



சாதி ஒழிப்புக்காக நமது கழகம் ஏன் அகில இந்திய ரீதியில் பாடுபடக்கூடாது என்று கேட்கப்படுகிறது. அகில இந்திய ரீதியில் சாதி ஒழிப்பு என்பது சுலபத்தில் சாத்தியமாயிராது. ஏனெனில் நம்மவர்களைப்போல் பெரும்பாலோருக்குள்ள மான உணர்ச்சி வடநாட்டாருக்கு இல்லை. அவர்கள் யாரும் சூத்திரன் என்பதற்காகவோ, பஞ்சமன் என்பதற்காகவோ, தாசிமகன் என்பதற்காகவோ வெட்கப்படுவதும் இல்லை. இந்து மதத்தை அவர்கள் நம்மைப்போல் வெறுத்து ஒதுக்குவதும் இல்லை. மாறாக, அதைப் பெருமையாகவே கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்நாட்டு மக்களோ ஆதிகாலந்தொட்டே சாதிபேதங்களை வருணாசிரம தர்மத்தை எதிர்க்கிறார்கள். எனவே, சாதி ஒழிப்பு நம்நாட்டில் சாத்தியமாயிருப்பது போல் வடநாட்டில் சாத்தியமாயிராது. எந்தச் சீர்திருத்தக் கருத்தும் வடநாட்டாருக்குச் சுலபத்தில் புரியவும் புரியாது. எனவேதான், தோழர் அம்பேத்கர் அவர்களால் கொண்டு வரப்படும் இந்துச் சட்ட மசோதா அங்கு பலமான எதிர்ப்புக்குள்ளாக வேண்டி இருக்கிறது. இதை எல்லாம் உணர்ந்துதான் நாம் நம் கழக முயற்சியை நம் திராவிட நாட்டோடு நிறுத்திக் கொண்டிருக் கிறோம்.

– 'விடுதலை' 22.02.1950

## பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரை

# பார்ப்பனிய மதவெறியை எப்படி சந்திக்கப் போகிறோம்?

*மார்ச் 20, 2022 அன்று தமிழ்த் தேச நடுவம் சார்பில் ‘பாவலரேறு தமிழ்க் களத்தில் ஆர்.எஸ்.எஸ்.ஸை தடை செய்ய வேண்டும் – ஏன்?’ என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிகழ்த்திய உரையின் சுருக்கம்:*

- *தடைகளைச் சந்தித்த ஆர்.எஸ்.எஸ். மீண்டும் வளர்ந்தது எப்படி?*
- *முதன்மையான எதிரியை அடையாளம் காண்பதில் தெளிவான புரிதல் வேண்டும்.*
- *ஒன்றிய ஆட்சியை எதிர்ப்பதற்கு தி.மு.க.வைத் தவிர வேறு வலிமையான அரசியல் கட்சி இல்லை.*

தமிழ்த் தேச நடுவத்தின் சார்பில் ஆர்.எஸ்.எஸ்.சை தடை செய்க என்ற முழக்கத்துடன் தோழர் பொழிலன், இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளார். ஆர்.எஸ்.எஸ். என்பது ஒரு அமைப்பு மட்டுமல்ல; அது பார்ப்பனியத்துக்கான கருத்தாக்கம். அமைப்பை தடை செய்தாலும் அதன் பாசிச பார்ப்பனிய கருத்தாக்கத்தை எதிர்ப்பு இயக்கங்கள் வழியாகவே தடுத்து நிறுத்த முடியும். ஏற்கனவே அவசர நிலை காலத்திலும், காந்தி கொலையின் போதும், பாபர் மசூதி இடிப்பின் போதும் தடை செய்யப்பட்ட அமைப்பு தான் ஆர்.எஸ்.எஸ்., ஆனாலும் அது தடைகளிலிருந்து தந்திரமாக மீண்டு வந்து தனது செயல்பாடுகளை திரைமறைவாகவும், வெளிப்படையாகவும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இப்போது ஒன்றிய ஆட்சியை இயக்கும் ‘மூளை’யாகவும் இயங்குகிறது. எனவே ‘தடை செய்’ என்ற நமது முழக்கம், அதன் பார்ப்பனிய கருத்தியல்களைத் தோலுரிக்கும் இயக்கத்தின் ஒரு பரப்புரையே தவிர, அரசு அதிகாரத்தைக் கொண்டு ஒடுக்க வேண்டும் என்பது அல்ல.

இங்கே தோழர் பொழிலன், ஏராளமான வரலாற்றுச் சான்றுகளோடு மிகச் சிறந்த உரையாற்றினார். தனது கொள்கைகளுக்கு எதிராக இருந்தவர்களைக் கொண்டே தந்திரமாக தனது திட்டங்களைச் சாதுர்யமாக எப்படி செயல்படுத்தி வருகிறது என்ற நுட்பமான கருத்துகளை முன்வைத்தார். லால்பகதூர் சாஸ்திரி, நேரு அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக இருந்தபோது ‘குடிஅரசு’ தின அணி வகுப்பில் லால்பகதூர் செல்வாக்கைப் பயன்படுத்தி, தனது சீருடையுடன் அணி வகுந்து வந்தது ஆர்.எஸ்.எஸ். பிறகு பிரதமர் நேரு இதை அறிந்து லால்பகதூரைக் கண்டித்தார். கன்யாகுமரியில் விவேகானந்தர் மண்டபத்தை உருவாக்க நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையெழுத்து இயக்கம் - காங்கிரஸ் ஆட்சியிலேயே எப்படி தந்திரமாக ஒப்புதல் பெற்றார்கள் என்ற செய்திகளையும் பொழிலன் குறிப்பிட்டார். கடந்த 10 ஆண்டு களாக தமிழ்நாட்டில் அ.இ.அ.தி.மு.க.வைப் பயன்படுத்தி தங்களது செயல் திட்டங்களை நிறைவேற்றி தமிழ்நட்டில் வலுவாகக் காலூன்ற வேண்டும் என்ற திட்டத்துக்கு பயன்படுத்திக் கொண்டார்கள்.

சூழ்ச்சிகரமான திட்டங்களோடு பல்வேறு முகமூடிகளை அணிந்து வரும் ஆர்.எஸ்.எஸ்.ஸை தமிழ்நாட்டில் நாம் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் என்பது நமக்குள் உள்ள ஒரு கேள்வி. இதற்காக ஒரு வரலாற்று அணியை நாம் உருவாக்க வேண்டும். அந்த அணி பரந்த அளவில் விரிவான தளத்தில் நாம் சார்ந்த இயக்கம், அமைப்புகளுக்கு முன்னுரிமை தராமல் ஆபத்தை முறியடிப்பதற்கான முதன்மை நோக்கத்தோடு புரிதல் உணர்வுகளுடன் செயலாற்ற வேண்டும். இது வரலாற்றுக் கடமை. இதைச் செய்யத் தவறினால் தமிழ்நாட்டில் நாம் கட்டி எழுப்பிய தனித்துவங்களைப் படிப்படியாக இழக்கும் ஆபத்துகளைச் சந்திக்க நேரிடும் என்ற உணர்வோடு அந்த அணி உருவாக வேண்டும்.

ஆக இந்த எதிர்ப்பை நாம் எப்படி முன்நகர்த்துவது, இளைஞர்களை எப்படி அணி திரட்டுவது, தமிழ்நாடு ஒரு மதவெறி பூமியாக மாறிவிடக் கூடாது. தமிழ்நாடு தனக்கென்ற ஒரு அடையாளத்திற்குள் அதற்கான உரிமைப் பதாகையை உயர்த்திப் பிடிப்பதற்குப் போராடுவதற்கு இங்கு இருக்கிற இளைஞர்களை இன்னும் சொல்லப் போனால் இந்து மதம் எது? இந்துத்துவா எது? என்பதைப் புரிந்து கொள்ளாமல் குழம்பிக் கிடக்கின்ற மக்களை, இளைஞர்களைத் திரட்டி ஒரு அணியிலே கொண்டு வருவதற்கான செயல் உத்திகளாக நாம் எதை வகுக்கப் போகிறோம்? இவை குறித்து சிந்திக்க வேண்டும்.

இப்போது நான் வெளிப்படையாகவே பேசுகிறேன். தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி வந்திருக்கிறது. இந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அப்படியே பெரியாருடைய கொள்கைகளை ஏற்றுக் கொண்ட கட்சி, திராவிட நாட்டுப் பிரிவினை இலட்சியத்தை நாத்திக கருத்துகளை ஏற்றுக் கொண்ட கட்சி அதே உணர்வுடன் இன்று ஆட்சி அதிகாரத்திலே வந்து அமர்ந்திருக்கிறதா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை.

ஆட்சிக்கு என்று ஒரு எல்லை உண்டு. இந்திய அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு செயல்பட வேண்டும். மக்கள் உணர்வுகளை மதித்து செயல்பட்டால்தான் தேர்தலில் வாக்குகளைப் பெற முடியும். இந்நிலையில்தான் கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியாக இருந்தாலும் செயல்பட வேண்டி யிருக்கிறது. ஆட்சியின் நோக்கம் ஆட்சியை கட்சியை வழி நடத்தும் தலைமையின் கொள்கை நமக்கு எதிராக இருக்கிறதா அல்லது உடன்பாடாக இருக்கிறதா என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைய சூழலில் பா.ஜ.க.வை வன்மையாக எதிர்க்கக் கூடிய கட்சியாக மாநில உரிமைகளுக்கு மொழி, இன உரிமைகளுக்கு, கல்வி, பொருளியல் உரிமைகளுக்கு குரல் கொடுக்கும் கட்சியாக தி.மு.க. ஆட்சி மட்டும் தான் இருக்கிறது.

ஊழலிலே திளைத்த ஜெயலலிதாவை உச்சி மீது பார்ப்பனர்கள் தூக்கி வைத்துக் கொண்டாடினார்கள். அவர்களின் குருவான சங்கராச்சாரியை கைது செய்த நிலையிலும் ஜெயலலிதாவை பகைத்துக் கொள்ள தயாராக இல்லை. ஒரு சங்கராச்சாரி போனால், வேறு ஒருவர் வருவார். ஆனால், அரசியலில் ஒரு ஜெயலலிதா போய் விட்டால், வேறு ஒரு தலைவரை நமக்காக இங்கே உருவாக்கவே முடியாது என்ற தெளிவான புரிதல் அவர்களுக்கு இருந்தது.

இப்போது தி.மு.க.வை வீழ்த்தியே ஆக வேண்டும் என்ற பதைப்புடன் எதிரிகள் களத்தில் நிற்கிறார்கள். பா.ஜ.க. ஆட்சிக்கு வர வேண்டும் என்பதே அவர்களின் உண்மையான விருப்பம். அதற்கு வாய்ப்பில்லை என்கிறபோது அ.இ.அ.தி.மு.க.வை அது எவ்வளவு மோசமான நிர்வாகத்தை நடத்தினாலும் பாராட்டுகிறார்கள். சிறு எதிர்ப்பைக் கூட வெளிப்படுத்த தயாராக இல்லை.

ஆட்சிக்கு ஆதரவாக இருந்த குறைகளை தவறுகளை பொறுப்புடன் சுட்டிக் காட்டுவது நமது கடமை. ஆட்சியையே வீழ்த்த வேண்டும் என்ற நோக்கத்தோடு அணுகுவது பார்ப்பனியத்துக்கும் ஒன்றிய ஆட்சியின் அடக்கு முறைகளுக்குமே வலிமை சேர்க்கும்.

சில நல்ல செயல்கள் ஒரு ஆட்சியில் இருந்து வருகிறது என்று சொன்னால் அந்த ஆட்சிக்குப் பாஜகவிடம் இருந்தும் எதிர்ப்பு வருகிறது. இந்துத்துவாவிடமிருந்தும் எதிர்ப்பு வருகிறது. நம்மைப் போன்ற முற்போக்கு சக்திகளிடமிருந்தும் என்ன குறை கண்டுபிடிக்க முடியும் என்று அதைக் கண்டுபிடித்து இங்கிருந்தும் அந்த எதிர்ப்பு வருகிறது. அப்படி இரண்டு எதிர்ப்புகளையும் தாங்கிக் கொண்டு ஒரு ஆட்சி என்ன செய்யும்? ஆட்சி எந்தப் பக்கம் சாய்வது என்று முடிவெடுக்க முடியாத சூழ்நிலைக்கு நாமே தள்ளி விடக் கூடாது.

உதாரணத்திற்கு நான் ஒன்று சொல்கிறேன். தமிழ்நாடு அரசின் ஒரு அறிவிப்பு நேற்று வந்திருக்கிறது. ஏற்கெனவே மூவலூர் ராமாமிர்தத்தம்மையார் திட்டம் என்ற ஒரு திட்டம் அந்தத் திட்டம் பத்தாவது படிக்கின்ற மாணவிகளுக்கு ரூ.50,000, ரூ.1,00,000 என்று பணம் கொடுத்து உதவுகின்ற ஒரு திட்டமாக ஏற்கெனவே இருந்தது. ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த பிறகு அந்தத் திட்டத்தில் ஒரு புதிய பிரிவை நுழைத்தார். என்ன பிரிவு? 10ஆவது 12ஆவது படித்த மாணவிகளுக்குத் திருமணம் என்று சொன்னால் அதற்கு அரசாங்கம் 8 கிராம் தாலி வாங்குவதற்கு தங்கம் கொடுக்கும் என்ற ஒரு திட்டத்தை அதில் கொண்டுவந்தார் ஜெயலலிதா. கல்வி வளர்ச்சிக்கான திட்டத்தை நம்முடைய பார்வையில் சொல்லப்போனால் பெண்களை அடிமைப்படுத்துகிற ஒரு தாலியினுடைய சின்னத்தை பயன்படுத்துவதற்கான ஒரு திட்டமாக மாற்றினார்.

இந்தத் திட்டம் நூற்றுக்கு 90% முறை கேடாகப் பயன்பட்டது. மோசடியாக பல திருமணங்கள் நடக்கிறது என்று கண்டுபிடிக்கப் பட்டது. அது பயனில்லாத ஒரு திட்டமாக மாறிப்போய் இன்னும் சொல்லப் போனால் அது பால்ய விவாகத்தைத் தடுக்கும் வரதட்சணையைத் தடுக்கும் என்ற பிரச்சனைகளை எல்லாம் எதிர் பார்த்துக் கொண்டு வந்த திட்டம் அதிலும் வெற்றி பெற முடியவில்லை என்ற நிலையில் இப்பொழுது அரசு என்ன முடிவு எடுத்து இருக்கிறது? தாலிக்கு தங்கம் கொடுப்பதை நிறுத்தி, 12ஆவது படித்த மாணவிகள் அரசுப் பள்ளியில் படித்த மாணவிகள் உயர்கல்வி எவ்வளவு தூரம் படிக்கிறார்களோ அதுவரைக்கும் ஆயிரம் ரூபாய் வழங்குகிற ஒரு திட்டமாக அதை மாற்றி அமைத்திருக்கிறது.

ஆக தாலி என்ற மத அடையாளம் நீக்கப்பட்டிருக்கிறது. குடும்ப வாழ்க்கை என்ற நிகழ்வுக்குத் தரப்படுகின்ற உதவியைவிட அவர்களுடைய கல்வி வளர்ச்சிக்குத் தரப்படுகின்ற உதவி முக்கியம் பெண்ணுரிமை கல்வி எனும் முற்போக்கு பார்வையோடு அந்தத் திட்டம் வருகிறபோது பெண்ணுரிமையைப் பேசுகிற பெண் விடுதலையை பேசுகிற மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மகளிரணி தாலி வழங்கும் திட்டத்தை நிறுத்தாதே என்று எதிர்க்கிறது. தி.மு.க.வை எதிர்க்கும் அத்தனை கட்சிகளும் இதை எதிர்த்தன. அந்தக் கருத்தை நாமும் சேர்ந்து கொண்டு ஒழிக்கலாமா.

இதில் அடங்கி இருக்கிற பிரச்சனை என்னவென்று பார்க்க வேண்டாமா?

(அடுத்த இதழில் முடியும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மேட்டூர் - கோவையில் கழகம் எடுத்த காமராசர் பிறந்த நாள் விழா



**மேட்டூர் :** மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக 15.07.2022 மாலை 5.00 மணி அளவில் கல்வி வள்ளல் காமராசர் 120ஆவது பிறந்தநாள் விழா நகரத் தலைவர் செ.மார்ட்டின் தலைமையில் நடைபெற்றது.

மேட்டூர் சின்ன பார்க் பகுதியில் உள்ள காமராசர் உருவச்சிலைக்கு தோழர்கள் அனிதா, கீதா, அறிவுமதி ஆகியோர் மாலை அணிவித்தனர். நகர செயலாளர் குமரப்பா முழக்கங்கள் எழுப்பினார்.

மேட்டூர் 16ஆவது வார்டு மஜீத் தெரு பகுதியில் காமராசர் பிறந்த நாள் விழா தெருமுனைக் கூட்டம் மாலை 6.00 மணிக்கு தொடங்கியது.

முதல் நிகழ்வாக பறைமுழக்கம், பகுத்தறிவு, ஜாதி ஒழிப்பு பாடல்கள் மேட்டூர் டி.கே.ஆர் இசைக்குழு தோழர்களால் நடத்தப்பட்டது. தொடர்ந்து சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ் தலைமையில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. நங்கவள்ளி அன்பு, தலைமை செயற்குழு உறுப்பினர் அ. சக்திவேல் ஆகியோர் உரையாற்றினர்.

நங்கவள்ளி, மேட்டூர் RS, கொளத்தூர் ஆகிய பகுதியிலிருந்து பொறுப்பாளர்களும், தோழர்களும் கலந்து கொண்டனர்.

பொதுமக்களிடையே துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. நிறைவாக மேட்டூர் நகரத் தலைவர் செ. மார்ட்டின் நன்றி கூற இரவு 8.00 மணி அளவில் தெருமுனைக் கூட்டம் நிறைவடைந்தது.

**கோவையில் :** கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 16.07.2022 அன்று நடைபெற்ற கல்வி வள்ளல் காமராசர் 120ஆவது பிறந்த நாள் விழா தெருமுனை கூட்டங்கள் செஞ்சேரிமலை - சுல்தான்பேட்டை - காமநாயக்கன் பாளையத்தில் நடந்தன.

**செஞ்சேரிமலை** பகுதியில் 16.07.2022 சனிக்கிழமை மாலை 4 மணியளவில் தெருமுனைக் கூட்டம் நடைப்பெற்றது. தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார்.



மாவட்டத் தலைவர் பா.இராமச்சந்திரன், விசிக பொறுப்பாளர் விடுதலை செல்வன், மாணவர் கழகம் விஷ்ணு தொடக்கவுரையாற்றினார். மாவட்ட கழகச் செயலாளர் யாழ்.வெள்ளியங்கிரி, மாநில பொருளாளர் திருப்பூர் துரைசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். கோவை மாநகர துணைத் தலைவர் வெங்கட் நன்றியுரை கூறினார்.

**சுல்தான் பேட்டை :** 16.07.2022 சனி மாலை 6 மணியளவில் சுல்தான்பேட்டை பேருந்து நிறுத்தம் அருகே தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சி தொடக்கமாக தோழர் கிருஷ்ணன் காமராசர் நினைவுப் பாடலை பாடினார்.

கோவை மாநகரச் செயலாளர் நிர்மல், சிவராசு, மாணவர் கழகத் தோழர் சபரிகிரி ஆகியோர் தொடக்கவுரையாற்றினர். நிறைவாக மாவட்ட கழகச் செயலாளர் யாழ்.வெள்ளிங்கிரி சிறப்புரையாற்றினார். ஆனந்த் நன்றி உரையாற்றினார். தோழர்கள் சூலூர் தமிழ்ச்செல்வி, சூலூர் நாகலட்சுமி புத்தக விற்பனை செய்தனர்.

தெருமுனைக் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற இறுதிவரை உதவியாக இருந்த விடுதலை சிறுத்தைகள் கட்சி விடுதலை செல்வன், காமநாயக்கன்பாளையம் பகுதி திமுக ஒன்றியச் செயலாளர் முத்துமாணிக்கம், திமுகவைச் சேர்ந்த மின்னல் இனிப்புக்கடை உரிமையாளர் ஆகியோருக்கு கழகம் நன்றி கூறுகிறது.

**காமநாயக்கன்பாளையம் :** திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நடைபெற்ற கல்வி வள்ளல் காமராசர் 120ஆவது பிறந்தநாள் விழா தெருமுனை கூட்டம் 16.07.2022 சனி இரவு 8 மணியளவில் காமநாயக்கன்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகே நடைபெற்றது.

நிகழ்ச்சி தொடக்கமாக கிருஷ்ணன் கல்வி உரிமை மீட்பு பாடலை பாடினார். மாணவர் கழகத் தோழர் மகிழவன் தொடக்கவுரையாற்றினர். மாவட்ட கழகச் செயலாளர் யாழ்.வெள்ளிங்கிரி, கழகப் பொருளாளர் சு.துரைசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

காமநாயக்கன்பாளையம் திமுக ஒன்றிய செயலாளர் முத்து மாணிக்கம் தோழர்களைப் பாராட்டி நன்றி தெரிவித்தார். விரைவில் ஒரு பொதுக்கூட்டம் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சூலூர் பன்னீர்செல்வம் நன்றி உரையாற்றினார்..

தோழர்கள் அனைவருக்கும் மின்னல் பலகாரம் கடை தோழர் அனைவருக்கும் தேநீர் வழங்கினார். திராவிட இயக்கத் தமிழர் பேரவை தோழர்கள் அனுப்பட்டி பிரகாஷ், சுபா உணவு வழங்கினார்கள். தோழர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

## மகிழ் உணவகம் : கழகத் தலைவர் திறந்தார்




ஈரோடு வெள்ளோட்டில் மகிழ் உணவகத்தை 17.07.2022 ஞாயிறு அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். பெயர்ப் பலகையை திமுக வின் மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வி.சி. சந்திரகுமார் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் திமுக மாநகர பகுதி செயலாளர் அக்னி சந்திரன், கொங்கு இளைஞர் பேரவை லிங்கேஸ்வரன், கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி, கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழக தலைமைக் குழு உறுப்பினர் காவலாண்டியூர் ஈஸ்வரன் மற்றும் கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

## பாஜக நிர்வாகிகள் மீது கழகம் புகார் மனு

திருப்பூரில் 15.07.22 அன்று பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் முறையான அனுமதி ஏதும் இல்லாமல் செல்ஃபி வித் அண்ணாமலை என்று விளம்பரம் செய்து, சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் வகையிலும், கல்லூரி வளாகத்திற்குள் அத்துமீறி நுழைந்து கல்லூரி முதல்வருக்கு மிரட்டல் விடுத்தும், கல்லூரி மாணவிகள், மாணவர்களின் கல்விக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் செயல்பட்ட பாரதிய ஜனதா கட்சியின் நிர்வாகிகளின் மீது தக்க பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து கைது நடவடிக்கை மேற்கொள்ளும்படி திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் 16.07 22 திருப்பூர் மாவட்ட காவல்துறை ஆணையர் அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டது.

திராவிடர் விடுதலைக் கழக திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு தலைமையில் திருப்பூர் மாநகரச் செயலாளர் மாதவன், 15 வேலம்பாளையம் பொறுப்பாளர் மாரிமுத்து, தோழர்கள் திலகவதி, பிரசாந்த் ஆகியோர் உடன் சென்றனர்.

## மதுரையில் ஆளுநருக்கு கருப்புக் கொடி



தமிழ் நாடு அரசின் உயர்கல்வித் துறையை புறக்கணித்து மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க வந்த ஆர்.என். ரவியைக் கண்டித்து மதுரையில் மாவட்ட கழக ஒருங்கிணைப்பில் அனைத்து ஜனநாயக இயக்கங்களின் சார்பில், 13.7.2022 அன்று காலை 11 மணியளவில் போராட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலார் மா.பா. மணி அமுதன் தலைமை தாங்கினார்.

சி.பி.ஐ., சி.பி.எம்., அதிமமுக, தபெதிக, தமுமுக, தமிழ் புலிகள், ஆதித்தமிழர் பேரவை, ஆதித்தமிழர் கட்சி, புரட்சிகர இளைஞர் முன்னணி உள்ளிட்ட இயக்கங்களின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து தோழர்களையும் காவல் துறை கைது செய்து மாலையில் விடுவித்தது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 21st July 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN